அனுப்புநர்

திரு.சா.சேதுராம வர்மா
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்

அனைத்து மாவட்ட அரசுத்
தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.

ந.க.எண். 023720 / எச்1 / 2022 நாள். 22.12.2022

ஐயா / அம்மையீர்,

பொருள் : சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள், மார்ச்/ஏப்ரல் 2023 – தனித்தேர்வர்கள் விண்ணப்பங்கள் மற்றும் தக்கல் விண்ணப்பங்களை ஆய்வு செய்ய அறிவுறுத்தல் – தொடர்பாக.

பார்வை: இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம், நாள். 22.12.2022.

-----

பார்வையில் கண்டுள்ள கடிதத்தில் நடைபெறவுள்ள மார்ச்/ஏப்ரல் 2023, மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுத ஆன்–லைன் வழியாக விண்ணப்பிப்பதற்கு **26.12.2022 முதல் 03.01.2023** வரையிலான நாட்களில் (சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக் கிழமை நீங்கலாக) அரசுத் தேர்வுகள் இயக்கக சேவை மையங்களுக்கு (Service centres) நேரில் சென்று விண்ணப்பிக்க வேண்டும் எனவும், மேற்குறிப்பிட்ட தேதிகளில் விண்ணப்பிக்கத் தவறும் தேர்வர்கள், சிறப்பு அனுமதித் திட்டத்தில் **05.01.2023 முதல் 07.01.2023** வரையிலான நாட்களில் அரசுத் தேர்வுகள் இயக்கக சேவை மையங்கள் வாயிலாக ஆன்–லைனில் விண்ணப்பிக்க வேண்டும் எனவும் தனித்தேர்வர்களுக்கு அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில் மேற்காண் நாட்களில் மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுகள் இயக்கக சேவை மையங்களுக்கு (Service centres) வருகை புரியும் தனித்தேர்வர்களின் விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவேற்றம் செய்தல் குறித்து முதன்மைக் கல்வி அலுவலர் வாயிலாக சேவை மையங்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

| | |
|---|---|
| தேர்வர்கள் விண்ணப்பங்களை பதிவு செய்யும் நாட்கள் | **26.12.2022 முதல் 03.01.2023 வரை (சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக் கிழமை நீங்கலாக)** |
| சிறப்பு அனுமதி திட்டத்தின் கீழ் (தக்கல்) விண்ணப்பங்களை பதிவு செய்யும் நாட்கள் | **05.01.2023 முதல் 07.01.2023 வரை** |
| விண்ணப்பங்கள் மற்றும் தேர்வர்களின் தேர்வுக் கட்டணத் தொகை மற்றும் ஆன்–லைன் கட்டணத்தொகையினை செலுத்திய பிறகு பெறப்படும் Payment Receipt-ஐ சேவை மையத்தினர் சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டிய நாள் | **09.01.2023** |

...2...

**<u>அரசுத் தேர்வுகள் இயக்கக சேவை மையங்களில் இருந்து பெறப்படும் தேர்வர்கள் விண்ணப்பங்கள் மற்றும் தக்கல் விண்ணப்பங்களை ஆய்வு செய்தல்</u>**

மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கு விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள் குறித்த விவரம் பட்டியலாக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. மேற்குறிப்பிட்டுள்ளவாறு, 09.01.2023–ல் அரசுத் தேர்வுகள் இயக்கக சேவை மையங்களிலிருந்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பெறப்படும் விண்ணப்பங்களை முழுமையாக ஆய்வு செய்து, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ளவாறு, மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வெழுத விண்ணப்பதாரர்கள் முழுத்தகுதி பெற்றுள்ளனரா என்பதை உறுதி செய்யுமாறும், விண்ணப்ப இணைப்புகள் முழுமையாக உள்ளனவா என்பதை சரிபார்க்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தகுதியில்லாத தேர்வர்கள் விண்ணப்பித்திருப்பின், அத்தகைய விண்ணப்பங்களின் விவரத்தினை கீழ்க்காணும் படிவங்களில் உள்ளவாறு பட்டியலாக தயாரித்து, பெயர், பிறந்த தேதி, பாடக்குறியீட்டு எண், பயிற்று மொழி, இதர விவரங்கள் ஆகியவற்றில் ஏதேனும் திருத்தங்கள் இருப்பின் அதனையும் பட்டியலிட்டு (முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டிற்கு தனித்தனியாக) அவற்றை **20.01.2023** அன்று dgeh4sec@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கும், அரசுத் தேர்வுகள் இயக்கக இணை இயக்குநர் (மேல்நிலை) அவர்களின் பெயரிட்ட முகவரிக்கும் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

| S. No. | Name | Date of Birth | Application No. | Remarks (Deletion) |
|---|---|---|---|---|
| | | | | |

**<u>அரசுத் தேர்வுகள் இயக்கக சேவை மையங்களிலிருந்து பெறப்பட்ட தேர்வுக் கட்டண Payment Receipt மற்றும் Final Summary Report</u>**

அரசுத் தேர்வுகள் இயக்கக சேவை மையங்களிலிருந்து (Service Centres) பெறப்பட்ட, மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் விண்ணப்பங்களுக்கான கட்டணத் தொகை மற்றும் ஆன்–லைன் கட்டணத் தொகையினை www.karuvoolam.tn.gov.in இணையதளத்திற்கு சென்று செலுத்தியதற்கான Payment Receipt மற்றும் Summary Reports ஆகியவற்றை உதவி இயக்குநர்கள் பாதுகாப்பில் வைத்துக் கொண்டு, அவற்றின் நகல்களை மட்டும் **25.01.2023–க்குள்** துணை இயக்குநர் (பொது) அவர்களின் பெயரிட்ட முகவரிக்குப் பதிவஞ்சலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு :**

1. தனித்தேர்வர்களுக்கான அறிவுரைகள்
2. அரசுத் தேர்வுகள் இயக்கக சேவை மைய அறிவுரைகள்

**ஒம்/–**
**இயக்குநர்**

**<u>நகல்</u>**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
2. கண்காணிப்பாளர்கள், எச்.4 மற்றும் அ3 பிரிவுகள் (அலுவலகம்).